முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1296

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.04.2023, திங்கட்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
   ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
   வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
   வள்ளலே வாழுகின்ற மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது தகர் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 04 ம் நாள், 17.04.2023 திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   தவதர்மபலம் கொண்ட மகாயோகி
   அண்ணலே என அரங்கனை இந்தப்புவியில்
   அடிபணிந்து சரணடைவு கொள்பவரெல்லாம்
4. எல்லோரும் கலியுகத்தில் ஞானிகளாவர்
   எல்லோரும் இந்த உலகமாற்ற சேவை தன்னில்
   வல்லமைபட பங்குகொண்டு இனிதே
   வரம்பெற்று அரங்கனால் அழியாமை பெறுவர்
5. ஆகவே அரங்கன் திருவடி பற்றி
   அன்னதான சேவைவழி உதவிநின்று
   வரங்கள் தா என நித்தம் நித்தம் ஞானிகள் பூஜை
   வையகத்தில் முக்காலமும் தொடர்ந்து செய்து வந்தால்
6. வருகவே அவர்களுக்கெல்லாம் ஞானியாகும் வல்லமை சடுதி உறுதியாகி
   தருகின்ற குணமும் பலமும் தவராஜனின் தக்க அன்பர்களாக
   உருமாறி இனிதே இந்த உலகில்
   உலகமாற்றம் புரியும் மகா சக்திகளாக மாறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–